செ.வெ.எண்.63 நாள்:18.07.2017

# பத்திரிக்கை செய்தி

அருள்மிகு சொரிமுத்து அய்யனார் கோவிலில் ஆடி அமாவாசை திருவிழா ஆண்டு தோறும் லட்சக்கணக்கான பக்தர்கள் வருகையுடன் நடைபெற்று வருகிறது. இந்த வருடம் சூலை மாதம் 23ம் தேதி ஆடி அமாவாசை திருவிழா நடைபெறவுள்ளதால் பக்தர்கள் கூட்டம் 20 ம் தேதியில் இருந்து வரும் என்று எதிர்பார்க்கபடுவதால் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் நடந்த கூட்டத்தில் அறிவுறுத்தியவாறு இன்று சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்

- போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த

1. ஆட்டோ 20.07.2017 முதல் 26.07.2017 முடிய அருள்மிகு சொரிமுத்து அய்யனார் கோவிலுக்கு செல்ல தடை செய்யப்பட்டுள்ளது.
2. இரு சக்கர வாகனங்கள், தனியார் வேன் மற்றும் கார் 22.07.2017 மற்றும் 24.07.2017 ஆகிய இரு தினங்களில் அருள்மிகு சொரிமுத்து அய்யனார் கோவிலுக்கு செல்ல தடை செய்யப்பட்டுள்ளது.

- பக்தர்கள் வசதிக்கேற்ப தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழக பேருந்துகள் அதிக அளவில் இயக்கப்படும். மேலும் திருநெல்வேலி, ஆலங்குளம் மற்றும் தென்காசி சுற்றுவட்டாரங்களில் இருந்து அதிகஅளவில் அரசுப்பேருந்துகள் இயக்கப்படும். மேற்படி சிறப்பு பேருந்துகளில் சுமைக் கட்டணம் (Luggage) வசூலிக்கப்படாது.

- நான்கு சக்கர வாகனங்களில் வரும் பக்தர்களின் வாகனங்கள் திருவள்ளுவர் கல்லூரி பின்புறம் உள்ள மைதானம் மற்றும் பாபநாசம் பணிமனைக்கு அருகில் உள்ள மைதானம் மற்றும் அகஸ்தியர் பட்டி Cambridge பள்ளிக்கு எதிரே உள்ள மைதானத்தில் நிறுத்துவதற்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சிறப்பு அரசுப்பேருந்து கட்டணம் அகஸ்தியர் பட்டியில் இருந்து சொரிமுத்து அய்யனார் கோவில் விலக்கு வரை செல்ல கட்டணம் ரூ 15/- (ரூபாய் பதினைந்து மட்டும் சுமை கட்டணம் கிடையாது)

- களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தினை UNESCO நிறுவனமானது பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் உயிர் பன்மை சான்றாக புவி உயிர்கோளமாக (World Biosphere Reserve) 2016ம் ஆண்டில் அறிவித்தது. இதனை பாதுகாக்கும் பொருட்டும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு கருதியும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது மேலும் பீடி, சிகரெட் ,மதுபானங்களும் தடை செய்யப்பட்டுள்ளது

சார் ஆட்சியர்
சேரன்மகாதேவி

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி